**செய்தி வெளியீடு எண்: 247** **நாள்: 09.04.2019**

## செய்தி வெளியீடு

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் 2019 மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல் எதிர்வரும் 18.04.2019 அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்தலின் வாக்கு எண்ணிக்கை எதிர்வரும் 23.05.2019 அன்று நடைபெறவுள்ளது.

தேர்தலை முன்னிட்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இன்று (09.04.2019) சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு, இ.ஆ,ப., அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது கூறியதாவது

தேர்தல் பணிக்கென பாதுகாப்பு பணியில் காவல்துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் 63,951 நபர்கள் ஈடுபடுகிறார்கள்.

சி–விஜில் செயலியை பொறுத்தமட்டில் இதுவரை 1954 புகார்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 834 புகார்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும், 1084 புகார்கள் நிராகரிக்கப்பட்டும், 36 புகார்கள் நிலுவையிலும் வைக்கப்பட்டுள்ளன.

இதுநாள் வரை ரொக்கப்பணமாக 122.30 கோடியும், ரூ. 227.26 கோடி மதிப்பிலான 812.3 கிலோ தங்கம், ரூ.1.95 கோடி மதிப்பிலான 482.49 கிலோ வெள்ளி உட்பட இதர உலோகப்பொருட்கள் ரூ.230.40 கோடி மதிப்பிலும், மதுபானவகைகள் ரூ.33.72 லட்சம் மதிப்பிலும், போதைப்பொருட்கள் வகைகள் ரூ.26.79 இலட்சம் மதிப்பிலும், மடிக்கணினி, குக்கர், சேலை, துணி வகைகள் போன்றவை ரூ. 7.54 கோடி மதிப்பிலும் சேர்த்து மொத்தம் ரூ.360.84 கோடி மதிப்பில் பறிமுதல் செய்யப்பட்டன.

வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு அடையாளமாக விரலில் வைக்கப்பட உபயோகிக்கும் அழியாத மை (Indelible Ink) ரூ.2.47 கோடி மதிப்பில் ஒவ்வொரு பாட்டிலிலும் 10 மி.கிராம் மை அடங்கிய 1,74,700 பாட்டில்கள் இந்த தேர்தலுக்கு பயன்படுத்தப்படுகிறது.

பதற்றமான வாக்குசாவடிகள் மொத்தம் 7,780 என கண்டறியப்பட்டு அந்த வாக்குசாவடிகளுக்கு நுண்ணிய பார்வையாளர்கள் (Micro-Observers) நியமனம் மற்றும் மத்திய துணை ராணுவ படை மற்றும் கணினி மூலம் நேரடி கண்காணிப்பு வசதி போன்றவை செய்யப்படவுள்ளது என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு, இ.ஆ,ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**